செய்தி வெளியீடு எண். 330 நாள்: 20.06.2023

**திருவள்ளூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 14 ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிக அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களுக்கான நேர்காணல் 22.06.2023 அன்று நடைபெறவுள்ளது – மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 14 ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிக அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assistant) பணியிடங்கள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டு, வெளிச்சந்தை முறையில் (Outsourcing) பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

அமைப்பியல் துறையில் (Civil Engineering) பட்டப்படிப்பு (B.E) மற்றும் பட்டயப்படிப்பு (DIPLOMA) முடித்து குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் தொழில்நுட்ப உதவியாளர் பணிக்கு 22.06.2023 அன்று 10.00 A.M. வியாழக்கிழமை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆட்சியரகம், திருவள்ளூர் என்ற முகவரியில் வெளிச்சந்தை மூலம் (Outsourcing) நடைபெறும் நேர்காணலில் கீழ்கண்ட சான்றுகளுடன் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**நேர்காணலுக்கு கொண்டு வரவேண்டிய சான்றுகள்**

1. கல்விச்சான்று (SSLC/HSC/DIPLOMA CIVIL/B.E CIVIL/MECIVIL/M TECH)
2. பள்ளி மாற்றுச்சான்று
3. இருப்பிடச்சான்று (குடும்ப அட்டை/ஆதார் அட்டை/வாக்காளர் அடையாள அட்டை)
4. பணி முன் அனுபவச்சான்று (2 ஆண்டுகள்)
5. கணிணி கல்வித்தகுதி
6. ஓட்டுநர் உரிமம்

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**